1657

உ

மிகப்பழைய முறைகளினும் மிகப் புதியவிதி.

கங்கை விழா

அல்லது

சுகாதார கொண்டாட்டம்.

சோசடகால விழா

முதற்பாகம்

பதிப்பாளர்.

எம். எ. வரதராஜன்,

சமாசப்பத்ரிரிக்கையின் தலைமை ஆசிரியர்,

கல்லக்குறிச்சி.

கல்லக்குறிச்சி சாது அச்சியந்திர சாலையில்

[illegible]பதிப்பிக்கப்பெற்றது.

[illegible]33 [விலை அணா 0-4-0

O2·
N33
128408

முன்னுரை.

கங்கைவிழாவை சென்றஆண்டு சுருக்கமாக அச்சிட்டு மூனிஸிபாலிட்டி யூனியன் போர்டு மாணவர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் பயனபடுமாறு கொடுத்துதவி யுள்ளோம்.

பல அன்பர்கள் இதையே விரிவாகவும் ஒழுங்காகவும் அச்சிட்டுதவல் அவசியமென கோரினபடியால் கங்கையின் விரிவான கூறுபாடுகளனைத்தும் ஒருங்கே சேர்த்து பண்டைகால நடநாட்டு வழக்க ஒழுக்கங்களோடு பிணைத்தும் எந்நாட்டினரும் கங்கையை பாது காக்கும் உச்சித முறைகளோடு நனகாராய்ந்தெழுதப்பட்டுள்ளது.

பொதுவாக எந்நாட்டு புலவர்களும், கவிகளும் சிறப்பு விதியாலும் உபமான உபமேயத்தாலும் பல கதைகளையும் சரித்திரங்களையும் எழுதி உதவியிருப்பதுவழக்கத்திலிருக்கின்றன, அதில்நம் தமிழ் நாட்டவர் ஜலத்தின் சகல சக்திகளையும் காட்டும் கண்ணாடியென தெளிவாக பாரதத்திலும் பல புராணங்களிலும் எழுதி வைத்துப்போயிருக்கின்றனர்.

சரித்திர ஆராய்ச்சிப்படிக்கு மேற்கோளும் ஜலத்தின் கூறுபாடுகளை விவரித்தெழுத இச்சிறு புத்தகம் போதாதென சுருக்கியுள்ளோம். பல அசந்தர்ப்பங்களிடையே இப்புத்தகம் வெளிப்போந்துளதால் பல எழுத்துப்பிழைகள் இலக்கணப் பிழைகள் காணப்பட்டபோதிலும் விஷயஆராய்ச்சிக்கு ஏற்றதென நன்மக்கள் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றனம். மாதிரி காப்பியாக இதனை அனுப்பியுள்ளோம். மறுபடியும்உயர்ந்த சடிதத்தில் அச்சிட்டுதவுமாறு எண்ணியுள்ளோம்.

M. A. வரதராஜன்
சமரஸம் ஆபீஸ்
கல்லக்குறிச்சி

புகழுரை.

பலவகைப்பட்ட நம்நாட்டு வழக்கங்களை அர்த்தமில்லாதனவ என்றும், மூடநம்பிக்கையாலேற்பட்டவையென்றும் இழிவுபடுத்தி கைவிட்டுவரும் இச்காலத்தில் அவைகளின் உண்மையை எக்கொள்கையரும ஏற்குமாறு எளியநடையில் தேசபாஷையில் பிரசுரம் செய்து விளங்கச்செய்வது மிகவும் அவசியமாயிருக்கிறது. மேல்நாட்டு பாஷையைக்கற்றும் மேலநாட்டு நாகரீகத்தைக் கைப்பற்றியுமுள்ளவர்களில் பெருப்பான்மைபோரே அனேகமாய் நமநாட்டு உற்சவாதிகளையும் பண்டிக்கைகளையும் எளனம்செய்வது சகஜமாயிருக்கிறது. அவர்கள் அவைகளின் உட்கருக்துக்களை ஊன்றி அறிந்துக் கொள்ளாததே அதற்குக்காரணம். மேலும் கற்றறிவில்லாத பாமரர்கள் அவைகளின் உட்கருத்துக்களை அறியாமல் நடத்துவதால் அவைகளின் பலனை முற்றிலும் அடைவதில்லை.

ஆகவே இருநாத்தாரும் நன்கறியுமாறு நண்பர் ஆசிரியர் **M. A.** வரதராஜன். அவர்களைப் போன்றவர்கள் முன்வந்து நம்நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் விழாக்களின் உட்பொருள்களை விளங்கச்செய்வதை அனைவரும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்வார்களென்று நான் நம்புகிறேன்

நண்பர் **M. A.** வரதராஜன். அவர்கள் "கங்கை விழா" வைப்பற்றி எழுதியிருக்கும் வியாசம் பல புது எண்ணங்களை தெரிவிப்பதுடன் இந்த விழாவின் உட்கருத்துகளை அனைவரும் அறியுமாறு எழுதப்பட்டிருப்பது மிகவும் மெச்சத்தக்கது. ஆசிரியர் மூலமாய் இதுபோன்ற பல வியாசங்களை நண்பர்கள் எதிர்ப்பார்ப்பார்களென்றேநம்புகிறேன்.

கல்லக்குறிச்சி
20—1—33

ஜே. ஸ்ரீனிவாஸ ராவ். பி. எ.
வக்கீல்.

ஓம்:

சுகவிழா அல்லது கெங்கைவிழா.

உலகத்திலே மக்கள் பெறுவதற்குரிய பேறுகளனைத்திலும் மிக்க அத்தியாவசியமானது சுகவாழ்வு. நமது வாழ்க்கையை இருகூறாகப் பிரிக்கலாம். ஒன்று சரீர சம்பந்தமானது- மற்றொன்று ஆத்ம சம்பந்தமானது- சரீரத்தை போஷிப்பதற்கு காற்று, ஜலம், உணவு, உடை முதலியன சுத்தமாயிருத்தல் வேண்டும். ஆத்மத்தை போஷிக்க உண்மை நூல்களால் ஏற்பட்ட அறிவும், அதன் சார்பாக வெழுகின்ற நல்லொழுக்கமும், சன்மார்க்கமும், தெய்வ பக்தியுமாகும். எனினும் சரீர வாழ்க்கைக்கும், ஆத்ம வாழ்க்கைக்கும் பெரிதும் சம்பந்தமிருக்கின்றன. அஃது,

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."—குறள்

என்னும் தெய்வத் திருவள்ளுவர் குறளடியை சற்று சிந்தியுங்கள் உலகத்தில் செம்மையாக வாழ்பவன் பரத்திலும் செம்மையாக வாழ்வான் என்பது இதற்கு உண்மை பொருள். அதுபோலவே தனது சரீரத்தை சுசியாகவும் செம்மையாகவும், போஷிப்பவனின் ஆத்மநிலை தெளிவாகவும், சுறுசுறுப்பாகவும், அறிவை கிரகிக்க வளமாகவுமிருக்கும். காரணம் சரீரசுகமில்லாது நோய் வாய்ப்பட்டிருப்பின், மனமும் புத்தியும் ஓர் நிலையில் நில்லாது பங்கி செய்வன செய்யாதொழிந்தும், செய்யத்தகவில செய்தும் ஆத்மத்துக்கு பழியையும், பாவத்தையும் சுமத்தி ஆத்மவாழ்க்கையை குலைத்து விடுகின்றது. ஒருவேளை சரீர போஷிப்பின் தவறினால் சரீரத்திற்கே ஹானி விளைந்து அதன் மூல்யமாய் சரீரத்தையும் அருமையான ஆத்மத்தையும் இழக்க நேர்ந்து விடுகின்றன- அந்தோ! என்ன விபரீதம்: இதினின்று என்ன விளங்குகின்றன: தேக வனப்பினோடு ஆத்மவனப்பும் பொருந்தப்பட்டிருப்பது கண்கூடு எனவே மக்கள்,

பரலோக வாழ்வை யடைவதற்கு ஆத்மசுகவாழ்வு அவசியம் ஆத்ம சுகவாழ்வுக்கு சரீர வாழ்க்கை யதியவசியமானது-

சரீர வாழ்க்கைக்கு இன்றியமையா பொருள்கள் முன்னமே கூறியுள்ளோம்- அவற்றுள் சாலச் சிறந்ததும் நமது பழைய பழைய மூதறிஞர்களால் போற்றப்பட்டதுமான ஜலத்தைப்பற்றி இங்கு விசாரணை செய்வோம்,

ஜலம் எல்லா உயிர்களுக்கும் ஆதாரமான பஞ்சபூதங்களுள் ஒன்று. தண்ணீரை திரமென்றும், ஜலமென்றும், கெங்கை, பாநி வாட்டர் யென்றும் சொல்லப்படுகின்றன. நமது பண்டை பேரறிவாளர் பிருதிவி அப்பு தேயு, வாயு; ஆகாசம் என்னும் பூதத்துள் தேயு, வாயு, அதாவது நெருப்பு காற்று என்னும் பூதங்களை ஆணாகவும், பூமி, ஜலம், ஆகாசம் என்னும் பூதங்களை பெண்ணாகவும் வர்ணித்திருக்கின்றனர். அவற்றுள் தண்ணீரை கெங்கையெனவும் பெண்டன்மை பெற்றதெனவும் ஞானசிகாமணிகள் சிறப்பு கூறிபோந்தனர். தத்துவ ஆராய்ச்சிப்படிக்கு உண்மையிலும் அவைகளிடத்தில் பெண்ணீர்மையுள்ளதென்பதற்கு பல சான்றுகளிருக்கின்றன

பொது சமஷ்டியில் இந்த பூதங்களை மட்டுமல்ல உலகத்து சராசரப் பொருள்களை யெல்லாம் இந்து கவிவாணர்கள் ஆணாகவும் பெண்ணாகவும் சந்தர்ப்பம் நோக்கி இலக்ஷணை கூறுவது வழக்கத்திலிருக்கின்றன, பொதுவாய் பெண்ணாக கூறும்பொருள்களிடத்து தாங்கும் சக்தியும், (MAGNITIVE FORCE ஆணாககூறுமிடத்து தள்ளும் சக்தியும் (ELECTRICALFORCE) பாயும் சக்தியுமிகுதிப்பட்டிருப்பது முக்கியாம்ஸம். நிற்க

இனி கங்கையின் வரலாற்றை விவரிப்போம் இந்து வேதங்களிலும் உப புராணங்களிலும் கங்கையை ஈஸ்வரன் ஜடாமுடியில் தரித்திருப்பதாகவும் கங்கையை பரமசிவனுக்கு பாரியாளென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

பரமசிவன் யோகியாகையால் சதா கங்கையில் ஸ்நானம் செய்தே தீரவேண்டும். யோகாப்பியாச இலக்கணப்படி முனிவர் சதா ஜலத்தில் மூழ்கியும் சடை உலராமல் ஜலம் தங்கியுமிருத்தல் வேண்டும். பரமசிவன் யோக புருஷனாகையால் அவர் காலத்தை பெரும்பாலும் யோகத்திலேயே செலுத்துவது சகஜ

மாயிருந்தது பல வருடங்களளவும் யோகத்திலிருந்து அசையாமலிருப்பது யோகிகளின் வழக்கம். இக்காரணத்தினால் மூளை கொதிப்புண்டு சில வேளைகளில் கபாலப் வெடிப்பதும் உண்டு இதற்கு ஜலத்தில் மூழ்குவதே பரம ஔஷதம். இக்காரணத்தினால் பரமசிவன் சதா ஜலத்தை சிகையில் சுதாவிட்டிருப்பது யுக்தம். இதனால்தான் பரமசிவன் சிகையில் கங்கையை வைத்திருப்பதாக வர்ணிக்கப்படுகின்றன. பொதுவாக உலகத்துயிர்களெல்லாம் ஜலத்தை பாரியைவிட அதிகமாய் நேசித்து வருகிறார்கள் அதிலும் யோகிகள் ஜலமே தங்கள் ஆயுள் விர்த்திக்குபிராணாதாரமாய் உண்டு வருகின்றனர். பாரி என்பதற்கு அன்பு, விளையாட்டு, சம்மந்தம் என்றும் பொருள்படுமாகையால்; பரமசிவன் கங்கையை பாரியாக வகித்துள்ளார் என்று ஞானார்த்தமான பொருளில் தத்துவம் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் தெரிவதென்னே! இந்த உலக சம்மந்தமான நிலையில் ஸ்தூல சம்மந்தமான உடலினலாகிய கங்கை என்னும் பெண்ணை கேவலம் காமயிச்சையின் பொருட்டு மனைக்கிழத்தியாகக் கொண்டுள்ளாரில்லை. பாரமார்த்திரமாக அன்பை கங்கையினிடத்து செலுத்திவந்தாரென்பதே உண்மை விதி. இக்காலத்துங்கூட மேல்நாடுகளிலும் கீழ்நாடுகளிலுமுள்ள பல பேரறிவாளர் பெண்களை காமக்கிழத்தியாக வரிக்காமல் பலகாரியம் மனிதசமூகத்தில் புகுந்து ஆற்றுதலுக்கு துணைவியாகவே மணக்கின்றனர்.

லக்ஷ்மி, சரஸ்வதி, கங்கை, பாரி, காமாக்ஷி இவைகள் சுகத்தை குறிக்கும் சக்திகள்- காளி, மாரியம்மை, அய்யன், பெரியாயி, வீரன், விட்ணுசுரம், சிவசுரம், இவைகள் நோய்களை குறிக்கும் சக்திகள். குறிப்பு:—பேதியாவதை காளி சக்தியென்றும்; அம்மைவார்ப்பதை மாரியம்மை சக்தி என்றும் பெரியாயி தூக்கம் மூதேவி சக்தி என்றும் அய்பன்—நரம்பு சிலந்தி வீரன் கட்டி சிறங்கு வகைகள்—விட்ணு சுரம்—விடசுரம், சிவசுரம் ஜீவன்முலசுரம்—யென்பதுவர்ணனை.

கங்கை உற்பத்தி.

பூமியின் மேல் பரப்பிலுள்ள ஜலபாகங்கள் சமுத்திரம் ஏரி குளம் முதலிய நீர்நிலையிலுள்ள ஜலம் சூரியன் கிரணத்தால்

நீராவியாக மேலெழும்பி மேகமாக மாறுகின்றன. குளிர்ந்த பருவக்காற்று அந்த மேகங்களின் மேல் பட்டவுடனே ஜலமாக வருஷிக்கின்றன- இந்த ஜலம் மிக்க பரிசுத்தமுள்ளதாகயிருக்கும். பூமியில் வருஷித்தவுடனே அந்தந்த பூசாரத்திற்கும், சுத்த அசுசியான இடத்திற்கேற்றவாறு நிறமும், குணமும், ருசியும், மணமும் அடைந்து பலவித நன்மை, தீமைகளை செய்கின்றன, மழை ஜலம் பூமியில் விழுந்து அசுசுவடையாவண்ணம் சாக்கடை மலஜலங்களை கழித்தல் இவைகளை அப்போதைக்கப்போது பூமியில் புதைக்க வேண்டும்,

ஜலத்தின் தன்மை

ஜலம் பூசாரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பலவாறு குணவிசேஷமுள்ளதாகயிருக்கும். சுண்ணாம்பு பாறையுள்ள நிலபாகத்தில் தங்கிய ஜலம் அதிசாரபேதி நீர் சுருக்கு கடுப்பு முதலிய வியாதிகளை உண்டாக்கும். பளிங்கு போன்ற தங்கம் சம்பந்தமான பாறையில்தங்கிய ஜலம் மிகுந்த சுத்தியும் சக்தியுமுள்ளதாகும். செம்மண்மிசிரமான பாறையின் ஜலத்தில் கிரிமி பூச்சியுண்டாயிருக்கும். சுரபூச்சிகளும்நிறைந்திருக்கும் களிமண் வெள்ளை பிராச்சியிலுள்ள சிலபாகங்களில் நரம்புச் சிலந்தி கொக்கி புழுக்கள் அதிகமாக உண்டாகும். அபிரகம உறைந்தஜலம் மிகுந்த பிராணதாரமானது. பரிசுத்தமும் நோயற்ற தன்மையுள்ளது இரும்புறைந்தஜலம் மிகுந்த சக்தியுள்ளது; ஆனால் சிலவித கிருமிகள் உண்டாக்கும்- எல்லா பூசாரத்தைக்காட்டிலும் ஈயம் கலந்த பாறையின் ஜலம் பிராணதாரமானது.

ஜலத்தின் உபயோகம்.

ஜலம் பாண்டங்கள் சுத்தி செய்வதும் ஆடை பாத்திரங்கள் முதலிய சகலவிதமான சுத்திகளுக்கும் ஆதாரமாயிருக்கின்றன- ஜலம் உயிர் வாழ்வதற்குரிய பொருள்களில் இரண்டாவதாகயிருக்கின்றது- ஜலமில்லாவிட்டால் எந்த ஜீவனும் சிலநிமிஷங்கள்கூட உயிர் வாழ்வது நிச்சயமல்ல.

ஜலத்தை நீராவியாக மாற்றி அதினால் மரக்கலங்கள், தொடர் வண்டி, யந்திரங்களை ஓட்டும் இஞ்சின் முதலிய பலவித மனித சக்திக்கும், புத்திக்கும் எட்டாத மகத்தான காரியங்கள் நடைபெறுகின்றன. பெட்ரோலம் முதலிய கார் இஞ்சின்களுக்கு கூட மிஷின் உஷ்ணம் ஏறாதபடி ஜலத்தையாவது, ஜலவாயுவையாவது பாதுகாப்புக்காக குழாய்களில் நிரப்பி வைப்பார்கள். மொத்தத்தில் ஜலத்தினாலாகாத கைத்தொழிலும் காரியங்களும் வெகுவாய் கிடையாதென்றே சொல்லலாம்.

நீர் வைத்தியம்.

தண்ணீர் நோயாளிகளுக்கு பரம உத்தம ஔஷதம்.

காய்ச்சல் உஷ்ணத்தினால் தேகம் கொதிப்புண்டு உஷ்ணக் காய்ச்சல், பித்தசுரம் உண்டாவது வழக்கம். இதற்கு தடித்த துணியை குளிர்ந்த ஜலத்தில் நனைத்து தேகத்தை சுற்றி வைத்தால் உஷ்ணக்கொதிப்பு நீங்கி காய்ச்சல் நின்றுவிடும். சிலர் பயப்படுவார்கள்; ஆனால் அநுபோகசாலிகளும் டாக்டர்களும் அஞ்சமாட்டார்கள். தீராத வயிற்றுவலிகளுக்கு ஒரு தொட்டியில் ஜலம் நிரப்பி ஒரு மணி நேரம் சரீரத்தோடு தொட்டிக்குள் வீற்றிருந்து சுகமடைந்தவர்கள் இன்றும் பலருளர். வியாகூலம், தண்டம், வியாதி, குடும்பக்கவலை இவைகளினால் மூளை குழம்பி மயக்கமுற்றபோழ்து அல்லது தலைவலி எடுத்த போழ்து குளிர்ந்த ஜலம், நிறைந்த தடாகம், அல்லது வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் அருவி, நீர்வீழ்ச்சி எனைய ஜலத்தில் மூழ்குவதனால் சுகமடைந்த மக்கள் கோடானுகோடி. ஏதாவது புதிய ஜலத்தில் குளித்ததினால் ஜலதோஷம் சளுப்பு, சீதளம் உண்டாயிருக்குமானால் மறுபடியும்பழக்கமாக அந்தஜலத்தை உபயோகப்படுத்து, அல்லது எஞ்ஞான்றும் புதிய ஜலத்தில் குளிக்க வேண்டிநேரிட்டால் குளித்தவுடனே இரண்டு மூன்று கை ஜலம் வாரி அருந்தினால் நிரந்தரமாகி நோய் வராது காத்துக் கொள்வர். கால்களிலாவது அல்லது வேறெந்த விடத்திலாவது வாயு பிடிப்பு, ஓட்டு வாயு பாரிசவாயு, இடுப்பு பிடிப்பு, கழுத்து பிடிப்பு உண்டாயிருக்குமானால் சுத்தமான வெள்ளை மல்கந்தல் துணியை

எடுத்து ஜலத்தில் நனைத்து பிடிப்புள்ள பாகத்தைச் சுற்றி சாதாரணமாக குளிர்ச்சியாக வைக்கவேண்டும், சிலநிமிஷங்களில் சுகமுண்டாகும். நீர்ரோதம் வாயு குடிப்புகள், குடைச்சல் முதலியவைகளுக்கு உறைந்த ஜலத்தை (ஐஸ்கட்டி)கொண்டு தேய்த்து ஒருமணி நேரம் மூடிவைக்க நீங்கிவிடும். சுளுக்குள்ள இடங்களில் உறைந்த ஜலத்தை தேய்ப்பதே பரம ஔஷதம். மரத்திலிருந்து விழுந்தவர்கள், உஷ்ணமுள்ளவர்கள், திடீரென மிரண்டு மூர்ச்சையானவர்கள், ஓயாமல் வெளியில் நடந்தாவது வேலைசெய்தாவது களைப்புற்று சோர்வடைந்தவர்களுக்கு பனிக்கட்டி, அல்லது ஐஸ்கட்டி கிடைக்காவிட்டால் புதுப்பானை ஜலத்தையாவது உடனுக்கு கொடுப்பது அநுபோக வைத்தியம. நெருப்பு, கொதிநீரால் வெந்த அபாயமான இடங்களில் குளிர்ந்த பானைஜலம், பனிக்கட்டி, ஐஸ் இவைகளில் எதுவானாலும் சரி துணியை நனைத்து அவைகளின் மேல் உடனுக்குடன் தடவிக்கொண்டிருப்பது சர்வ சாதாரணமான வழக்கம். கூடுமானால் சுண்ணாம்பு கலந்த நீரையும் உபயோகப்படுத்துவார்கள். கத்தியினாலாவது, மரத்திலிருந்து விழுந்ததினாலாவது அல்லது யந்திரங்களில் வேலைசெய்ததினால் தவறாக காயம் ஏற்பட்டவர்களுக்கு ரத்தம் வடியுமிடத்தில் ஜலத்தில் நனைத்த துணியைச் சுற்றி வைப்பது முதல் உதவியாகும். தினசரி பல போசனக்கிரமப்படி செய்ய முடியாத போழ்து காலையில் விழித்தவுடன் தந்த சுத்தி செய்து வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் ஜலத்தை சாப்பிட சரியான விரோசனமாகும். பேதியாகவேண்டுமானால் அதிகமாக உட்கொள்ள வேண்டும்.

ஆத்ம சுத்தி

கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும் காலையில் ஜலத்தை சிகையில் ஊற்றி அபிஷேகம் செய்வதும், இந்துக்கள் ஸ்நானம் செய்து பூஜை செய்வதோடு தீர்த்தபானம்செய்வதும், மகம்மதியர் கோவில்களில் செய்கையால் தடாகமேற்படுத்தி கைகால் சுத்திசெய்து பிறகு ஆண்டவனை தொழ வேண்டுமென்பதும் ஆத்ம சுத்திக்கு ஆதாரமென்பது பல மதக்கொள்கைகளாயிருக்கின்றன. சமையல் செய்த பதார்த்தங்கள் 2, 3, நாட்கள் மட்டும

கெட்டுப் போகாமலிருக்க வேண்டுமானால் ஓர் பாத்திரத்தில் ஜலம் புகாதபடி அடைத்து ஜலதொட்டிக்குள் விட்டு வைத்தால் கெட்டுப்போகாதபடி புதிதாகஇருக்கும்

நெடுந்தூரம் நடந்து கால் நோயால் வருந்தும் ஒருவன் கிணற்றிலாவது ½மணி நேரம் தன் பாதங்களை முழங்கால் வரைக்கும் நனைத்து வைத்திருந்தால் வலி பறந்து போகும். காரணம் பாதத்திலிரங்கிய இரத்த முழுதும் குளிர்ந்த ஜலம் பட்டவுடனே ரத்த ஓட்டம் அதிகரித்து திரேகத்தில் பாவிவிடும்.

வெந்நீர்

திரேகம் வியர்க்க வேண்டுமானாலும், களைப்பாற வேண்டுமானாலும் பக்குவமாக காய்ச்சின வெந்நீர் சாப்பிட வேண்டியது அவசியம். கபம், இருமல், கோழையுள்ளவர்கள் அடிக்கடி வெந்நீரை உபயோகப்படுத்துவார்கள். காப்பி, தேயிலை பானத்தைப்போல் வெந்நீரும் பலனை உற்சாகத்தையும், களைப்பையும் ஆற்றும். தளர்ந்த திரேகமுள்ளவர்கள் ஓயாமல் அதிகப்படிவேலை செய்து அதனால் திரேகவலிகொண்டவர்கள் வெந்நீரில் ஸ்நானம் செய்வது வழக்கம். அஜீர்ணமுள்ளவர்கள் ஒரு டம்ளர் வெந்நீரை உட்கொள்ள மந்தாக்கினி அகலும். அஜீர்ணத்தால் வயிறு உப்பிசம் கொண்டு மூர்ச்சையடைந்து திப்பிரமை கொள்ளும் சமயத்தில் கொதி ஜலத்தில் மெல்லிய துணியை நனைத்து பிழிந்து ஆவியோடு துணியை ஒத்திடங்கொடுக்க வேண்டும்; அல்லது தாமிரப் பாத்திரங்களில் சுடு ஜலத்தை முகர்ந்து ஈரத்துணியை நோயுள்ள பாகத்திலாவது வயிற்றின் மேலாவது போட்டுபாத்திரத்தால் ஒத்திடங்கொடுக்க வேண்டும். சீதளசுரம், சளுப்பு, மூக்கடைப்பு முதலியவைகளுக்கு பானை கொதி ஜலத்தை கீழேவைத்து ஒரு போர்வையால் வியாதியஸ்தனையும் மூடி வேடுபிடிக்க வேண்டும். வியர்க்கும் போழ்து அடிக்கடி துடைத்து விடவேண்டும்.

வியாதிஸ்தர்கள் குளிக்கவேண்டிய அவசியமானால் கொதிஜலத்தில்கந்தையை நனைத்து பிழிந்தாவியினால் திரேகத்தைதுடைப்பார்கள் சதா மூடுபனியும் குளிர்ச்சியுமுள்ள பிரதேசங்களில் சதா வெந்நீரையே உபயோகப்படுத்துவார்கள். தேள் கடி

நகசுத்தி, வேறுவிதமான விஷக்கடிகள் தேகத்தில் ஆரம்பமாகும் சமயத்தில் பொருக்கமுடியாத கொதி ஜலத்தில் அவைத்து வைத்திருக்க விஷம் நீங்கி சுகப்படுவது பழமை வழக்கம்.

1 பானை ஜலத்தை காய்ச்சினால் 1700 படங்கு பானை ஆவியாகிறது. அந்த ஆவியின் வேகத்தினால் பாரமான பொருள்கள் இழுக்கப்படுவதோடு மேல்நாட்டாரின் நாகரீகத்திற்கும் அபிவிர்த்திக்கும் ஆஸ்பதமாயிருக்கின்றன. ஜலம், துணி, தூக்கை சடல் பஞ்சு முதலிய அணுகரண த்வாரமுள்ள பதார்த்தங்களின் மூலம் கீழிருந்து மேலேறிச்செல்லும் சக்தி வாய்ந்தது பூமிக்குள் பாறைகளுக்கிடையிலாவது, மணல்பிரதேசங்களிலாவது சிறிய குழாய்களை ஜல ஓட்டத்தின் பக்தியில் இறக்கிவிட்டால் ஜலம் குழாய்களின் வழியாக 100 அடி உயரத்திற்கு மேல் கிளம்பி உயிர்களுக்கு பிரயோஜனப் படுவதுண்டு.

சுகாதார முறை.

“நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்” என்கிறபடி சுத்தமான கங்கையை பருகுவதும், குளிப்பதும், ஆடை பாத்திரங்கள் சுத்தி செய்வதும் சுசத்தைக் கோலுமுறையாகும். இவ்வாறு ஒழுகும் ஒருவனிடத்தில் எக்காரணம் தொட்டும் நோய் இடம் கொள்வதில்லை இதற்கு மாறாக அசுத்த கங்கையை உபயோகிக்கும் பிராணிகள் நோய்வாய்ப்பட்டு பிணிக்கப்படுவார்களென்பது சுகாதாரநூலின் திண்ணம். இதைப்பற்றி பண்டை அறிவாளர் சுத்த ஜலத்தின் சக்தியைக்குறிக்கும் அறிகுறியாக கெங்கையம்மன் உற்பத்தியின் பெருமையை பல புராணங்களில் பலவிதமாக இயற்றி காண்பித்திருக்கின்றனர். அவைகளெல்லாம் உண்மையுணர்ந்த மனித சமூகத்திற்கு அனுகூலமானவைகளே அவைகளில் ஒன்றை இங்கு சுருக்கி காட்டுவோம்.

கங்கையின் உண்மை உற்பவத்தை பற்றி முன் ஒரு பக்கத்தில் விவரித்திருக்கின்றோம். இங்கு முன்னோர்கள் கங்கையை பாமர மக்கள் பரிசுத்தமாய் கருதுவதற்கான யுக்தியை சரித்திர

சம்பந்தமாய் இயற்றி மக்களுக்கு உதவியுள்ளார்கள். ஜலத்தின் சக்தி, தன்மை பரிசுத்தம், பரிணமசக்தி, ஜலவாயுவின் மாறுதல் அப்புபூத சேஷ்டையும், அகோர ரூபத்தையும் பல அறிவாளிகள் பல புத்தகங்களுள் சரித்திரங்களினிடையிடையே உப கதைக ளாக கோர்வை செய்திருப்பதை என்னென்று மகிழ்வது! உட்பு லணையறிந்தார்க்கு தேனினும் சுவைமிக்கதன்றோ!

கங்கையின் அவதாரிகை

சக்தி புராணக் கூற்று:— கற்பகோடி காவத்திற்கு முன்பு பூமியானது உருண்டை வடிவான பந்துபோலிருந்தது. திடீரென வெடித்து அதினின்று பராசக்தி நெற்றிக்கண் சூலம் மணிமந்திரங்களோடு தோன்றினள்; பலயுகங்கள் வரையில் சக்தி யொருவளே பூமியில் தாண்டவம் கொண்டிருந்ததாகவும், அத னல் யாதொரு நன்மையும் தோன்றாது கண்டு நெற்றிக்கண் சூலம் மணிமந்திரகங்ளின் உதவியால் மாயாசக்திகள் ஒரு கோடி யுண்டாக்கினள். சில யுகங்கள் வரையில் பெண் சக்திகள் தவிர ஆண் சக்திகள் நிலவாதிருக்கக்கண்டு உடனே மணிமந்திரங்களின் உதவியால் ருத்திரனை உண்டாக்கினள் ருத்திரன் உடனே தாயே என்ன பணி அளிக்கின்றாய்யென வினவ நாம் ஒரு புருடனைக் கோரி சிருஷ்டிக்க இவன் தாயே என்றுகூறுகின்றானே யெனக் கோபித்து நெற்றிக்கண் சக்தியால் ருத்திரனையும், மாயாசக்திகளை யும் எரித்து விட்டாள். ஒரு யுகத்திற்கு பிறகு மறுபடியும் சதா சிவத்தையுண்டாக்கினள் அவனும் எழுந்து தாயேயென்ற ழைக்க கோபித்து அவனையும் எரித்துவிட்டு பிர்மாவை படைத் தாள். அவனும் ஒருங்கே எரிந்து நீரானன். பின்னர் மகாவி ஷ்ணுவை படைத்தாள். அவர் கபடநாடக சூத்திரதாரியாய் விளங்கினர். சற்று மௌனித்து இங்ஙனம் சாம்பலாக கிடக்கும் விந்தையென்னேயென வினவினன். அதற்கு பராசக்தி உனக்கு முன் மூவரை எரித்துள்ளேன். அவர்களின் சாம்பல் இவ்வாறு சேமிக்கப்பட்டுள்ளனவென்று விடை பகர்ந்தாள். உடனே தன க்குள்ள சூக்ஷம சக்தியால் அவனின் மனோபீஷ்டமறிந்து இவர் களை எழுப்பினள் உன் இஷ்டப்படி காரியத்தை பூர்த்தி செய்வே னென்றான்

பின்னர் பராசக்தி அவ்வாக்குக் குடன்பட்டு சதா சிவன் தவிர ருத்திரனையும் பிர்மாவையும் எழுப்பினள் ருத்திரன் கபடநாடகனின் சூதினால் ஏவப்பட்டவனாகி ஆடி பெண்ணே உனக்கு யாது தேவை யென வினவினான். என்னை மணந்து கொள்ள வேண்டுமென கோரினாள். அவ்வாராயின் உனது நெற்றிக்கண், சூலம் மணிமந்திரங்களை எனக்கு கொடுத்தால்தான் அதற்கொவ்வேனென விடையிறுக்க; அக்கணமே நெற்றிக்கண் சூலம் மணிமந்திரங்களை ருத்திரனுக்கு ஈந்தருளினாள் நெற்றிக்கண் அடைந்த சின்னாட்களுக்குப் பிறகு கபாலம் கொதிப்படைந்து அகோர உருவு கொண்டு செந்தீ பற்றியெரிய மகாவிட்ணு அதை யறிந்து பூமியை இடது காலால்தோண்டி ஜலம் திரட்டி கெஙகையை பரம சிவம் சிரசில் வைத்ததாக சொல்லபபட்டுள்ளது. இது தான் கங்கையின் ஆதிதோற்றம்

☞ விளக்கம். இந்தக் கட்டுரையின் சூக்ஷம அர்த்தமாவது சத்திக்கு 3வது கண் என்று கூறப்பட்டிருப்பது ஞானக் கண்ணை குறித்ததே யொழிய ஊனக்கண்ணை குறிப்பிட்டதல்ல ஞானத்தினாலேயே உலகத்து சராசரஙகளெல்லாம் உருவாக்கப்பட்டு, காக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட ஞானம் சக்தி மயமாயிருந்தது. ஸ்தூல யாக்சையினிடம் வந்தவுடனே அதைகாப்பாற்றும் கபாலம் சரியான நிலையிலிருக்கவேண்டியது அவசியம். ஞான ஆராய்ச்சியுள்ள மனிதனுக்கு கபால உஷ்ணமுண்டாகும். சில சமயங்களில் மூளை கெட்டு பயித்தியம் பிடிப்பதும் இயற்கையா யிருக்கின்றன.

எப்படி ஒரு நீராவி என்ஜினுக்கு கவர்னர் என்ற ஆயுதம் ஆதாரமா யிருக்கிறதோ அப்படியே ஞான ஆராய்ச்சியாளருக்கு குளிர்ந்த ஜலம ஆதாரமாயிருக்கின்றன. மூளை கொதிப்படையாமல் குளிர்ந்திருப்பதற்கு சதா குளிர்ந்த ஜலத்தில் மூழ்குவதே பிராயச்சித்தம். .யென முன்னோரிடத்தில் கூறப்பட் டிருக்கின்றன. பரமசிவன் ஞானத்தினால் பல தடவைகளில் வெறி கொண்டு சுடலைகளில் புரண்டதாகவும் பிச்சை யெடுத்ததாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஷை கூறிய காரணத்திற்கா

கவே கெங்கையை பரமசிவன் சிகையில் மகாவிஷ்ணு வைத்த தாக கதைப் பாங்கு. ஞானத்திற்கு ஜலம் ஆதாரமாக படைக்கப்பட்டிருக்கின்றதென்பது இதன் பொழிப்புரை.

கெங்கைக்கு எழுவகைப் பிறவிகளிருப்பதாக புராணங்கள் கூறுகின்றன அவற்றின் 2வது பிறவியைப்பற்றி ஆராய்வோம்

கங்கையின் இரண்டாவது சரிதை ஜலத்தின் பரிபூரண சக்தியைக் குறிக்கின்றது. அதாவது ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் அமுர்தம் கிடைத்ததாகவும் மகாவிஷ்ணுவின் சூழ்ச்சியால் அசுரரை நீக்கி சுரர்களுக்குமாத்திரம் அமுர்தத்தை வினியோகப் படுத்தியதாகவும், அதனுல் அசுரர்கள் பொருமை க்கொண்டு தேவர்களோடு போர்புரியத் தொடங்கினர்களாம். அதனைச் சகிக்க ஏலாதவர்களாய் சமுத்திரத்தில் தவம் செய்துக்கொண்டிருந்த மீன மகா முனிவரைச் சூழ்ந்து தவளை ரூபமாக மாறி மறைந்திருந்தனர். அசுரர்கள் தேடித் தேடியெங்கணும் காணுது சமுத்திரத்தை அணுகி பார்க்கும்போது அங்கு மீன மகா முனிவரையும், சத்தியக் கொடியை நாட்டி கீழ் தவளைரூபமாக மறைந்துள்ள சுரர்களையும் கண்டு இவர்கள்தான் தேவர்களென உறுதிகொண்டு ஜலத்தை இறைத்து வதைசெய்ய ஆரம்பித்து விட்டார்கள். அசுரர்கள் மிக்க சாமர்த்தியர்களாகையால் ஜலபாகத்தின் பெரும் பகுதியை வடித்து விட்டார்கள். உடனே சுரர்கள் கண்டு பயந்து பரமசிவனிடம் முறையிட பரமசிவன் தமது கங்கை சத்தியை அனுப்பி சமுத்திரம் முன்போலவே பொங்கி வழிய ஆஞ்ஞாபித்தருளினர். சமுத்திராஜனுக்கு கங்கை பிள்ளையாக பிறந்து தனது பரிபூரண சத்தியைக் காட்டவே, பொங்கும் ஜலத்தை வடிகட்ட தங்களால் இயலாது சோர்ந்து ஏமார்ந்து பிர்மித்து தங்கள் தங்கள் பதிக்குப் போய் சேர்ந்தனர் என்பது ஓர் பிரிவு.

கங்கையின் மூன்ருவது அவதாரமாக சந்தன மகாராஜன் பாரியை கூறுவர் அந்த அம்மையார் பாரத வீரர்களில் ஒருவனுன வீட்டுமனை பெற்றுள்ளார். சுத்த வீரர்களில் ஒருவனுகவும் ஞான மணங் கமிழ்ந்த ஞானிகளுக்குத் தலைவனுகவும் விளங்கினர். வீட்டுமாச்சாரியை விட உயர்ந்த அறிவாளி அக்காலத்

ந்தில் கிடையாதென சொல்லலாம். இவ்வித அறிவை எங்கிருந்து பெற்றார். கங்கையின் கூட்டுறவுதான். கங்கை இன்பம் அனுபவிக்கக்கூடிய ஓர் பெண்ணல்ல ஜலத்தினிடத்தில் வீட்டுமர் சதா ஆவலுள்ளவராகையால் அவருடைய தாயாராக சொல்லி யிருக்கிறது, அல்லது கங்கையின் சக்தியால் அவர் ஒருவீரனாக துலங்கினாரென கூறுவதற்காகப்பிறந்த கதைப்போக்காக இருக்கலாம். எப்படி யிருந்தாலும் சரி, இந்த வர்ணனை ஜலத்தை நேசிக்கும் மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் நாயகமாக விளங்குவார்கள் யென்பதை காட்டும் உவமை கட்டுரையாகும்.

கங்கை நான்காவது பிறவியாக கங்கைவிதிகுல சிகாமணிக்கும் வேதநாயகிக்கும் புத்திரியாக ஜலம் திரட்டுகையில் கங்கையில் குழந்தையாகத்தோன்றி குழந்தையில்லா மலடுகளுக்குபிள்ளைகலி தீர்த்து சின்னாட்களுக்கு பின்னர் ஜலத்திலேயே மறைந்து போனதாக எழுதப்பட்டுள்ளன

இது கண்ணுக்கு புலனாகும் ஜலம் கண்ணுக்குப் புலப்படாது நீராவியாகி ஜலம் மறைந்து போகும் அதிசயமும், பிறகு ஜலமாக உறையும் ரூபவேற்றுமைகளும் இனிது புலனாவதோடு பிள்ளைகலியும் தீர்க்கும் சக்தி வாய்ந்ததென விளங்குகின்றது

ஐந்தாம் பிறவியாக திடீரென ஓர் குளக்கரையில் கங்கை என்னும் குழந்தை தோன்றி பல மகிமைகளை செய்து வந்ததாகவும் ஜனங்கள் கண்டு ஆச்சரிய மடைந்து கங்கையை வழி பட்டு ஆராதித்து வந்ததாகவும் சொல்லப்படுகின்றன

பின்னர் சின்னாட்கழித்து மற்ற தேவதைகள் பொறாமை கொண்டு விஷ்ணு சுரம் (விஷ சுரம்) வந்தெதிர்த்தது யுத்தஞ் செய்து தோல்வி யடைந்து பின்னர் [ஜீவசுரம் சிலேட்டும சுரம்] வந்தெதிர்த்து யுத்தஞ்செய்து அபஜெயமடைந்தது அதன் பிறகு காளி(பேதியுண்டாக்கும் சக்தி)வந்தெதிர்த்தது முறையே பின்னடைந்தது. பிற்பால் வீரன்[கட்டி உண்டாக்கும் சக்தி]வந்தெதிர்த்தான் அவனும் முறியடிக்கப்பட்டான் பிறகு ஐயனார் வந்தார் [கட்டிகளுக்கெல்லாம் தலைவன்]அல்லது நாகபுசிலந்தி அவரும் பின் வாங்கப்பட்டார் கடைசியாக மாரி வந்தெதிர்த்து சமத்துவமாக போர் புரிந்தாளென்பது கதையின் வரலாறு [மாரி மழைக்கால சுகாதார தேவதை போகிநயாகி யென்றும் கூறுவர்.]

அக்காலத்து அறிவாளிகள் ஜலத்தை சுத்தமாய்வைத்திருப்பதே சுகத்தின் ஆதாரம், யென்னும்பொருளை யுயிர்களுக்கு உணர்த்து மாறு கங்கை மாரியை சுத்த தேவதையாகவும், காளி, வீறன் சிவசுரம், விஷ்னுசுரம், அய்யனர் முதலியவர்களை (அசுத்தசக்தி) அஷ்டதேவதை களாகவும்கூறி இச்சரிதையை கோர்த்துள்ளார் கள்.

கங்கை யோகிகளுக்குபாநியாகவும் பாமரர்களுக்கு தெய்வ மாகவும விளக்கப்பட்டிருப்பது ஆழ்ந்த அநுபோக யுக்தியாகும்

ஆராவது பிறளியாகபகிரதன் பரமசிவன்சடாபாரத்திலுள்ள கங்கையை பூமியினிடமாகக்கொண்டு வரும்படிக்கு மகத்தான தவமும் முயற்சியும் செய்து இந்தியாவின் வடசார்பிலூறுவதும் உலகத்து உன்னதபர்வதங்களுள் தலைமையானதுமான ஹிமயோக்கிரியின் உன்னத சிகரங்களுள் உற்பத்தியாகி கங்கையென்னும் பெயர் தாங்கி மேற்கிலிருந்து கிழக்கு மூகமாய் சென்று வங்காள குடாக்கடலில் கலக்கிறது. இது உலகத்திலுள்ள நதிகளில் நிளமும அகலமுமுள்ளதென்றும், இந்நதியில் ஸ்நாநம் செய்வதால் சகலபாபமும தீருமென்றும், பல சிறப்பு விதிகளால் புனைந்து பல அறிஞர்களின் உபநிஷதங்களால் கோஷிக்கப்பட்டு வருகின்றது உண்மையிலும் இந்நதி ஹிமயத்தின்மூடப்பட்ட பனிப்பாறைகள் சூரிய வெப்பத்தால் கறைந்து ஜலமாகமாறி ஓடுகின்றது. இதுஉற்பத்தியாகுமிடத்தில் மிக்கபரிசுத்தமும் நிர்மலமுமாக இருக்கும். இதன் உபநதிகளின்ஒன்றில் அச்சலத்தின் தூய்மை ஸ்நாநம்செய்தால், எல்லாவியாதிகளும் போய்விடுவதாகவும், விடாத கறை பட்ட துணிகளை தோய்பதிலேயே வெளுப்புண்டாவதாகவும் யாத்திரிகர்கள் பலர் அதிசயமாக சொல்லுகிறார்கள். வழிகெடுக பல ஆபாசங்கள் சேர்வதால் ஜலம் கெட்டு அசுத்ததிரவமாக ஓடுகின்றது. இதன் கரையில் காசி, (பாட்ன) பாடலிபுரம், அலஹாபாத், கான்புரி, ஹரித்துவாரம் முதலியக்ஷேத்திரங்கள், இந்தியாவில் மிகப்பெரிய நகரங்களில் தலையான கல்கத்தா நகரமும் இந்நதியின் கரையில்தானுள்ளது.

அப்பப்பா! இதன்பெருமையையெப்படிப்பின்றுவதூ! இதன் கரையிலுள்ள பிரதானபட்டணங்களும், இந்நதிபாயுப்பிரதேசங்களும்கங்கையின் மகிமையினுல், செல்வத்திலும், செழிப்பிலும், வனப்பிலும், நாகரீகத்திலும், உயர்ந்த அறிவிலும், தேவலோகையும் தேவர்களையும் ஒப்புவமை பெற்றுளது என்பது மிகையாகாது. பழையகால புராணிகர் ஹிமயோத்கிரியின் சிகரமே கைலாசமாகவும் கங்காபுனலே கயிலங்கிரியில் வாழும் பரமேசுவான் சிகையிலிருந்து ஊறுவதாகவும், வர்ணித்திருக்கின்றனர் பகிரதனே இந்நதி கீழிறங்க ஆதாரம் என்றும், பகிரதன் அரும் பிரயத்தனத்தின் முதிர்ச்சியால் மலைக்குன்றுகளிடையே உள்ள பாறைகளையும் குறுக்கிடும் மேடு மலைகளையும் வெட்டி உடைத் தெரிந்தரும்பிரயாசையால் இந்நதியைபெரியபிரவாகையாகசெய் திருப்பாரென யூகிக்கப்படுகிறது. மனிதர்கள் செய்தற்கரிய அரும் வினைகளை ஆற்றும்போழ்து இஃது "பகீரத பிரயத்தனம்" யென்று உவமை கூறுவது வழக்கத்திலிருக்கிறது. இம்மட்டுமா. நிச்சயமாகவே இதன் சிறப்பு ஈடற்றதானதாக விளங்குவதற்கு இன்னொரு இயற்கை சாக்ஷியையும் இந்நதியிலேயே பார்த்துவிடவாம். ஓர்பக்கம் ஹிமயத்தின் உச்சியின் பனிக்கட்டிகள் ஆயிரக்கணக்கான அடிகள்உயரம் உறைந்திருக்கின்றன. அவைகள் பார்வைக்கு கண்ணாடிபாறைகளாகவேநிர்ணயிக்கவேண்டும்; பிறகு அதினின்று சூரியவெப்பத்தினுல் கறைந்து ஜலமாகமாறி ஆயிரக்கணக்கான அருவிகளாக ஓடி கங்கா தீர்த்தமென ஜலரூபத்தை அடைகின்றது மற்றோர் பக்கம் சில நிமிடங்களுக்குள்ளாகவே சூரிய வெப்பத்தினுல் கங்கா புனல் ஆவியாக மேலெழுப்பி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடுகின்றது. பின்னர் குளிர்ச்சியினுல் மேலெழுந்த நீராவிகள் பாறைகளாக உரைந்து ஹிமயத்தின் சிகரத்தில் அணியணியான முத்துமலைப்போல் காணப்படுவதை கண்டு தெரிசிப்பதற்கே காலங்கள்பலவேண்டும்!

இதுதான் கங்கையின் உண்மைஅவதாரம் பஞ்சபூதத்துள் ஒன்ருகிய அப்புபூதத்தின் சகலசக்தியும் இந்தசாக்ஷிகளிலேயே ஒருங்கே காணப்படுகின்றன. நிற்க

இனி எழாவது பிறவியாக பராசக்தி அவதாரமாக சொல்லப்படுகிறது. உலகமும்சராசரப் பொருள்களும் உண்டாவதற்கு

178408

முன்னமே ஜலத்தின்மேல் கடவுள் ஆலைகொடிக் கொண்டிருந்ததாக மேல்நாட்டு நூல்களின் முடிவு. தமிழ்புராணங்களிலும் கீழ்நாட்டு உபநிஷதங்களும் பெரும்பாலும் அவ்வாறே கூறுகின்றன உலகத்தின் முடிவுகாலத்தில் (கங்கையேபராசக்தியாகி) உலகமுழுதும் ஜலத்தால் மூடப்படுமென்றும் யுகங்கள் தோறும் நடப்பதாக இந்துமத கிரந்தங்களின் கொள்கையாகும். இதனால் அறியக்கிடப்பதென்னே! ஆக்குவதும், ஆற்றுவதும் அழிப்பதும் இச்சக்திக்குயுள்ளதென்பதை இக்கதையிலிருந்து தெரிந்துக்கொண்டோம் இப்பால் கெங்கையை ஒவ்வொரு தேயத்தவரும் எவ்வாறு கோரிவழிப்படுகிறார்கள் என்பதை விசாரிப்போம்.

இந்நாட்டில் பழையகாலத்து அறிவாளிகள், வழிப்போக்கில் பிரயாணிகளுக்கு சௌகரியமாக குளங்கள் வெட்டியும் கிணறு குளம் இல்லாதஊர்களில் புதிதாகவெட்டியும் ஆறுகளிலும் ஓடைகளிலுமுள்ள ஜலத்தை வாய்க்கால வெட்டி அதன் வழியாக ஜலத்தைகொண்டுவந்து ஊருக்கு சமீபத்தில் தேக்கியும் தாங்கள் செய்த தொண்டு முடிவுற்றதைமுன்னிட்டு குதூகலமாக கெங்கைவிழா கொண்டாடுவர்கள் பழையகிணறுகளையும் குளங்களையும் தூறுவாரியும் கெங்கைக்கு திருவிழா போடுவார் இது பெரும்பாலும் கோடைகாலத்தில் ஆனி ஆடி மாதங்களில் தான் நடைபெறும், அக்காலங்களில் ஜலம் வடிந்து தூருவாருவதற்கு எற்றகாலமாகி விடுகின்றன.

தூருவாரியோ புதிதாக குளம்வெட்டியோ புதிய ஜலத்தை மண் கரகத்தில் முகர்ந்து வேப்பிலை சொருகி அப்பு தேவிக்கு படைத்து ஆர்ப்பரிப்பார்கள். அக்காலங்களில் பொதுகலங்களுக்கு திருப்பணி செய்கின்றவர்களுக்கு வெள்ளித்துண்டுசெம்புத் துண்டுகளைக் கூலியாய்க் கொடுப்பதில்லை. திருப்பணியாளர்களுக்கும் ஏழைமக்களுக்கும் கொப்பரைகளில் கஞ்சி நிரப்பி, தினைமாவு பழம் முதலியவைகளோடு அனைவர்க்கும் திருப்தியாக வார்த்து; சுவைபண்டங்களை வாரியெடுத்து உண்டுமகிழ்வார்கள் கொப்பறைகளில் பலஜாதிமக்கள் சமைத்தசமையல்களையும் ஒருமிக்க வார்த்து சமமாக போஜனம் பண்ணுவார்கள் இதற்காக

கங்கா சமரஸதேவி யென்றும் பொருள் கூறுவர். இன்னும் சற்று வடகிழக்கே போய் பாருங்கள். அங்கு சீனமக்கள் வசிக்கிறார்கள். சீனமக்கள் கங்கையை கோருவது வியக்கத்தக்கதாகும். நீர்நிலைகளுக்கருகில் ஆபாசம் உண்டாகாமல் தடுப்பதே அவர்கள் பூர்ண கொள்கை.

இயற்கையாக பெய்யும் மழை துளிகள் பூமியில் உறைந்து கெட்டுப்போகாமல் பூபாசத்தில் மல ஜலங்களையாவது வேறவிதமான குப்பை கூளங்களையாவது விட்டு எடுப்பதில்லை அவைகளை ஒவ்வொருவரும் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் புதைத்து வைப்பதோடு மலஜலங்களை பள்ளங்களில் கழித்து மண்மூடிவிட்டுதான் சுத்தி செய்வார்கள், இவ்வித பழக்கம் ஒவ்வொருவருக்கும் இளமையிலேயே பழக்கப் பட்டுவருகின்றன. பிரதிவருஷமும் ஜலத்திற்கு சமீபத்திலாவது ஜலவருவாயுள்ள பிரதேசத்திலாவது மிருகங்களின் சவம், குப்பைகள் அழுகின பதார்த்தங்கள் முதலியவைகளை அனைவரும் கூட்டி பொறுக்கியெடுப்பார்கள். பின்னர் தூர்வாரியோ ஜலத்தை இறைத்தோ பலவிதமாக ஜலசுத்தி செய்து கெங்கைவிழா கொண்டாடுவார்கள் ஜலசுத்தி செய்யும் கொள்கையைப் பற்றி பலபாடல்கள் பாடி ஆர்ப்பரிப்பார்கள் அதுபோழ்து நீர்நிலைகளுக்கருகினில் ஒவ்வொருவரும் மிக்க தழைத்து நிழலைத்தரும் மரங்கள் ஐந்து நடுவதாக பிரார்த்தித்து அவ்வாறே நட்டு பாதுகாப்பார்கள். இதனுல் அத்தேயத்தில் நீர்நிலைகளுக்கருகில் சதா வளர்ச்சியும் அடர்த்தியும், தோப்புகள் அருவிகள், நந்தவனங்கள் சூழ்ந்ததாகவும் பெரும்பாலும் உற்சாகத்தை கிளர்வதாக காணப்படும்.

அப்படியே வடமேற்கில் திரும்புங்கள் அங்கு என்ன இருக்கிறது; பாரசீகமிருக்கிறது. நம்நாட்டில்தானு! பாரசீகத்திலும் கெங்கையை குலதெய்வமாகபோற்றுகிருர்கள் அவர்கள் திரிகரணத்தாலும் பரிசுத்தமாய் வணங்குகிருர்கள். சமுத்திரம், குளம் தடாக முதலிய நீர்நிலைகளுக்கருகேதான் சாதாரணமாக வசிப்பார்கள் வருஷாவருஷம் கோடை காலத்தில் கங்கையை சுத்

தாம் செய்த நரகத்திலடைத்து கங்கைக்கு படைத்து மகிழ்வார்கள். நம் மவர்களைப்போல் போலிவணக்கமாய் வணங்காமல் ஜலத்தை சுத்தமாய் வைத்திருப்பதில் அரியதொண்டு செய்கிறார்கள். ஜலத்தை அசுசி செய்கிறவர்களை கடுமையாய் தண்டிப்பார்கள் கைகால்கள் கழுவல் மலஜலங்களை கழுவல் துணி தோய்த்தல் பாத்திரசுத்தி, மரம் தோல்களை ஊறவைத்தல், முதலியன அந்நாட்டில் கிடையா! தேவையானால் பாத்திரங்களில் முகர்ந்தும், ஜலத்தை பள்ளங்களில் இறைத்தும் தேவையான காரியங்களுக்கு உபயோகப்படுத்துவார்கள்.

அவர்கள் வழிப்பயணம் போனாலும்கூட காடுகளிலுள்ள ஓடைகளில் காலலம்பமாட்டார்கள் பாத்திரத்தில் முகர்ந்து தான் சகலசுத்தியும் செய்வார்கள். இதற்காகத்தான் அவர்கள் போகும் இடங்கள் தோறும் சிறு செம்புகையில் சுமந்து செல்லுவது இன்றையவரைக்கும் வழக்கத்திலிருக்கிறது. ஏன் அப்படி? அவர்கள் ஜலத்தை வெளிக்குதெய்வமாககும்பிடாமல் உண்மையிலேயே தெய்வமெனவும், ஜலம்சுத்தியாயிருப்பதே தங்கள் ஆயுள் விர்த்தியின் முதற்காரணமென்றும் நன்குணர்ந்தவர்கள். அவர்கள் சமுத்திர ஜலத்தில் கூடஎச்சல், துச்சம்விடவோ விடுகிறவர்களைப் பார்க்கவோ மனம்பொறார்கள். இவர்களுக்கு குலதெய்வம் பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய கங்கை, (அப்பு) (அக்கினி) தெயுவமாகும் இவர்கள் மிகுந்தஒற்றுமையும் வயிராக்கியத்தோடு ஒவ்வொருகாரியத்தையும் செய்வார்கள். அதற்கடையாளமாக வயது வந்த ஆண்மக்கள் ஒவ்வொருவரும் அறையில் (இடுப்பில்) (கிர்பான்) என்றவாளாயுதம் சொருகிவைப்பார்கள். கையில்தண்டமும் பாத்திரமும் சமயம்போல் உபயோகப்படுத்துவார்கள். இந்தசின்னங்கள், அவர்கள் ஒழுங்கையும், வைராக்கியத்தையும் சுத்தத்தையும் குறிக்கின்றது

மகம்மதியர் கொள்கைகளையும் நாம் பாராட்டாது இருக்கமுடியாது, மகம்மதியமதத்தில் ஜலத்தை சுத்தி செய்யும் முறைகள் அநேகமாயிருக்கின்றன, அவைகள் மனிதசமுகம்

செய்து முடிக்க இயலாத நிலைமையில் மிகவும் கடுமையான நிலையிலிருக்கின்றன. அந்தமகத்தான நியம நிஷ்டைகளை அரபி லிருந்து தமிழில் ஓர் அசரத்து மூல்யமாய் சொல்லக்கேட்டு என் மனங்கொண்ட குதூகலத்தை என்னால் சொல்ல முடியவில்லை, இஸ்லாமிய மதத்திலுள்ள கட்டளைகளில், மிகவும் முக்கிய மானது 130—கட்டளைகளாகும் அந்த 130—கட்டளைகளில் ஒரு கட்டளை சுத்தத்தையே கோஷிக்கின்றது. மொத்தத்தில் 130 கட்டளைகளும் சுத்தத்தையே போதித்தபோதிலும் ஜலசம் பந்தமான சுத்தம் ஒன்றேயாகும். மற்றகட்டளைகள் ஆத்ம சுத் தம், திரேக சுத்தம், இடசுத்தம், தொழுகை சுத்தம் முதலிய பலவகை சுத்தங்களைப்பற்றி விவரிக்கின்றன. இயேசுபரி சுத்த ஆத்மாவின் ஜீவமொழிகளுக்கு அர்த்தத்தை கண்டு பிடிக்க கிரு ஷ்ண பரமாத்மாவின் கீதையைப்படிக்க தெள்ளன விளங்கும கீதைக்கும் அர்த்தம் தெரியாதவர்கள் மகமதிய குரானைப் படித்தால் ஸ்பஷ்டமாய் விளங்கிவிடுமென்பதில் ஐயமில்லை. இதைப்பற்றி வேறு புஸ்தகத்தில் விவரிப்போம். ஜலசுத்தி சம் பந்தமாக பல தொடர்கள் அப் புத்தகத்திலுள்ளன. அவற்றில் இரண்டை சேர்த்துக்குவோம். முதலாவது ஜலத்தின் அளவு; அந்த அளவுக்கேற்ற அசுசி. இரண்டாவது உலக வாழ்க்கையில் ஈடுபடும் ஒவ்வொருவனும் ஜலத்தினல்தன்னை அபிஷேகம் செய்துக்கொண்டாலன்றி (மசூதி) தேவாலயத்தில் பிரவேசிக்கப் படாது, குறிப்பு:— கிணறுகளில் காலணு எடையுள்ள மிருகங் களின் மலதுச்சம் விழுந்தால் அவைகளை உடனே பூராவும் வாரி ஊற்றி விட்டுதான் உபயோகப்படுத்த வேண்டும்; ஏரி தடாகமுதலிய நீர்நிலைகளில் 1 மணங்கு எடைமல முத்திரங்கள், கலந்தால் அது உபயோகப்படுத்துவதற்கு விலக்கானதாகும் மிருகங்களின் மல மூத்திரங்கள்பட்ட ஜலத்தை உள்ளுக்கு உபயோகப் படுத்தப்படாதென றும் சொல்லப்பட்டுள்ளன. எச் சல், சளி மல மூத்திரம் 1—தம்பிடி எடை திரேகத்தின்பேரிலா வது, ஆடை முதலிய எந்த இடங்களிலாவது பட்டால் உடனே ஸ்நாநம் செய்யவேண்டும் பரிசுத்த ஸ்தலத்துக்காவது பரிசுத்த

வான்களோடாவது நுழைவதற்கும் பேசுவதற்கும் அருகதை யற்றவன். ஸ்திரீ புருஷாள் சேர்க்கையினல் வேறு அசுசியான ஆதாவது ஆடு கோழிகளை வெட்டுவதினுவது அசுசி பெற்ற வன் ஸ்நாநம் செய்தே தீரவேண்டும் ஜலாதாரமான ஏரி. குளம் தடாகம் கிணறு மருதிக்கெதிரிலுள்ள ஜல தேக்கங்களில் ஆபாசம் உண்டுபண்ணவோ அல்லது நாற்றமுண்டுபண்ணவோ கூடாது.

தினந்தோரும் குளித்து சுத்தமாயிருத்தல் வேண்டும் அப்படி குளித்து சுத்தமாயிருந்தால் சாதாரணமான எல்லாபா பங்களும் போகும் என்று கூறியுள்ளது. பொதுவாய் ஜலத் துக்கு ருசி, நிறம், மணம் இருக்கப்படாது. இருந்தால் உபயோ கிப்பதற்கு பிரத்தியேகமானது என்று கூறுகின்றது.

ஜலசுத்திசம்மந்தமாக எல்லாமதங்களும் பல தொண்டுகள் செயதுக்கொண்டுதான் வருகின்றன. ரோமர் கிரேக்கர்கள்கூட ஜலத்தைப்பற்றி பல ஆதியான மூலப்பிரச்சினைகள் எழுதி வைத் திருக்கின்றூர்கள் அவைகள்பிற்காலத்தில் சாஸ்த்திர சம்பந்தமாக மாறிவிட்டது. அதிலிருந்து சுகாதார ஸாஸ்திரமென்று நூல் ஒன்றுளது. அதில் தண்ணீருக்காகவே பலபக்கங்கள் ஒதிக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஜலத்தின் கூறு, அதன்தன்மை, பரி ணமசக்தி, ஆசக்தி அதினின்று உபயோகப்படும் பல மின் சாரங்கள் நீர் வீழ்ச்சியிலிருந்து எடுக்கப்படும் மின்சார சக்திகள், மின்னல் இடி முதலியவற்றிலிருந்து எரிக்கும் மின்சார விளக்கு கள் முதலியவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இனி கிறிஸ்தவமதத்தில் கெங்கையை எவ்வாறு போற்று கிறூர்களென ஆராய்வோம். எந்தகிறிஸ்த்தவர்களைக் கேட்டாலும் அவகள் நிச்சயமாகவே நாங்கள் கெங்கையை போற்றுவ தில்லை என்று கூச்சலிட்டு சொல்லுவார்கள். நான் எனது ஆரா ச்ச்சியில் பைபில் என்னும் வேதத்தில் பழைய புதிய ஏற்பாடு என்ற இருவகை அதிகாரங்களையும் கூர்ந்து கவனித்துளேன். பழைய ஏற்பாட்டின் ஆகமங்களின் பெரிய தத்துவங்க

ளெல்லாம் சொல்லக் கேட்டுளேன். ஆனல் பழைய காலத்து யூதர்களில் பரிசேயர், சதூசேயர் ஆயக்காரர்கள், வேதபாரகர்கள் என்ற ஜாதியார்கள் நிலவி யிருந்தார்கள். பரிசேயர் -வேத பாரகர்கள் என்ற இரண்டு ஜாதியாரும் இத்தேயத்து பிராம்மணர்களைப்போல் நடித்து காட்டுவார்கள். ஆசாரம், ஒழுக்கம், தீண்டாமை முதலியவைகள் கொழுந்துவிட்டு எரியும். அவர்கள் ஜலத்தைபற்றி சில இடங்களில் பெருமையாக பாராட்டியிருக்கிறார்கள் இதை விவரிக்க பெருகு மாகையால் இங்கு நின்று மறுபடியும் திரும்புவோம்

ஜலத்தைப்பற்றி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு தேயத்தவரும் போற்றி பாராட்டுவது செப்புதற்கு எற்றவைகளல்ல, ஆனல் அத்தனையும் திரட்டி பேரனலாகிய குடமொன்று அழகுஜொலிக்கும்படி செப்பனிட்டு ஜலம முகந்து அதை மூடிவைப்பதற்கு "மாணிக்கக்கற்களால் செதுக்கப்பட்ட மூடியை அந்தகுடத்தின்மேல் மூடிவைத்தால் அழகும் பிரகாசமும் எப்படி உதிக்குமோ அத்தகைய வழிகள் புதுப்பிககப் பட்டுள்ளன. அவற்றை சுருக்கி தீட்டுவோம். யோர்தான் நதிக்கரையில் யோவானல் மனந்திரும்பி குணப்பட்ட பல ஆத்மாக்களுக்கு புனர்ஜென்மம் பாறவிட்டதாக அறிகுறியைகாட்டும் பொருட்டு ஜலத்தை கைகளில்வாரி சிரசிலிட்டு அபிஷேகம் செய்வது வழக்கமாயிருந்தது- பின்னர் சாந்த மூர்த்தியாகிய எசு பெருமான் ஆங்கு சென்று யோவானல் தானும் ஞானஸ்தான மடைய முழந்தாளிட்டு இருகைகளையும் குவித்து பயபக்தியோடு அபிஷேகத்துக்கு தகுதியாகினர்; யோவான் ஜலத்தைவாரி சிகையில ஊற்றி அபிஷேகம் செய்வித்தான். இது ஸ்தூல வாழ்கையினின்று விடுபட்டு ஞானவாழ்கையின் வழியை கண்டு அதன் பாதையில் நடந்து தேவரோடு ஐக்கியமாவார்கள் என்பதை யுணர்த்தும் ஐதிகமாகும்.

கிறிஸ்தவர்கள், இந்துக்களைப்பார்த்து பரமசிவன் சிகையில் கெங்கையை தரித்திருப்பது என்ன மதியீனமாகும் அதுசாமிக்கடுக்குமா என்று சொல்லுவதும்; இந்துக்கள் கிறிஸ்தவர்

களைப்பார்த்து வெறும் ஜலத்தை சிகையில் வாரி நனைத்தால் ஞானியாகவும் பரமனோடு ஐக்கியப்பட்டவராகவுமாகிறது எவ்விதம். இது ஒரு மாயா ஜாலம் என்று சொல்லுவதும்; உண்மையறியாத குருடனும் செவிடனும் கூற்று பார்த்த ப.ங்குகளாம்

ஜலத்தை தினந்தோரும் சிகையில் ஊற்றி அபிஷேகம் செய்துக்கொள்ளுகிறவன் உண்மையில் ஞானியாகுவான் என்று முன்னோரிடத்தில் கூறயுள்ளோம். ஜலம் வெளியரங்க...ன ஆபாச அழுக்குகளை போக்குவதற்கு எப்படி உபயோகப்படுத்துகிறோமே அப்படியே ஆத்ம சுத்திக்கும் பாரமார்த்திக வாழ்விற்கும் ஜலம் சிரேஷ்டமானது என்று உண்மைநாதன் ருசப்பித்து காட்டிவிட்டான். ஆயிபப யென்னத்துக்கு இது ஒன்று போதாதா!

பிறுத்தி: இனி கங்கையை முற்காலத்தில் எவ்வாறு விழா கொண்டாடி வந்தார்கள் தற்காலம் எவ்வாறு கொண்டாடப்படுகிறதென்பதை விசாரிப்போம்.

இந்நாட்டினவர் கோடைகால கெங்கை விழாவை எவ்வாறு நடத்துகிறார்களென்பதைப் பற்றி முன்னோரிடத்தில் சொன்னோமல்லவா. அதைப்பற்றி முடிவாக சில வார்த்தைகள் கூறிவிடலாம்.

இந்நாட்டினர் வருஷாவருஷம் கோடையில் ஜலம் வறண்டுவிடுமாகையால் அக்காலத்தில் தண்ணீர் அழுக்காயும் மங்கலாயுமிருப்பதோடு புழுக்கள் நிரம்பியதாக காணப்படும். அப்போழ்து கிராம பெரியத்தனக்காரர்கள் ஒருங்கே கூடி ஓர் தினத்தை குறிப்பிட்டு அன்றைக்கு வீட்டுக்கு ஓர் ஆள் விகிதம் வருமபடி தெரிவிப்பார்கள். ஆஞ்ஞாபித்த அக்கணமே ஆங்கு ஒன்று கூடி ஒவ்வொருவரும் வைராக்கியத்தோடு இந்த பாரமான காரியத்தை சாதித்து விடுவதாக கங்கணம் கட்டிக்கொள்

வார்கள். ஆதற்கடையாளமாக மஞ்சள் கொம்பு ஒன்றையெடுத்து நூலோடு பிணைத்து கையில் தரித்துக்கொள்வார்கள் இந்த சடங்குகளின் உண்மையாவது, நான் இன்றுமுதல் வைராக்கியத்தோடு இவ்விழாவை பூர்த்தி செய்யப்போகிறேன். இடையில் நேரிடும் எவ்வித கஷ்டநஷ்டங்களுக்கும் நான் அஞ்சுவதில்லை இந்தகங்கணம் கையிலிருக்கும் வரையில். ஒருபொழுதுதவிறமுப்போழ்துஉண்பதில்லை. காரிகையார்முகம் பார்ப்பதில்லை வேறுஎவ்விதமான உறவுக்கும்கூட்டுக்கும்உட்படேன். இழவுஇல்லவந்தாலும் கங்கணத்தை களையாது ஊரைவிட்டு போகேன். ஜலத்தை இறைத்துவிட்டு ஊற்று ஜலத்தையன்றி வேறு ஜலத்தை அருந்தேன். அப்படி தவறிவிட்டேனுனல் நான் செத்த பிணத்துக்கு சமானம் என்று சங்கல்ப்பம் செய்துகொண்டு ஆரம்பிப்பார்கள். இப்படி கங்கணம் கட்டிக்கொள்பவர்கள் பெரும்பாலும் மணமாற்றப் பெருத இளவகாளையர்களாகவே இற்பர். விழாவை பத்துதினமாகக்கொண்டாடுவர். அதுபோழ்து எல்லா தடாகம், துறவு, குளங்களை தூர்வாரி சுத்தப்படுத்துவார்கள், சிலவுக்கு தானியமும், பணமும் வேண்டியிருப்பின், கன்னியர்கள் வேடம்தரித்து கெங்கைபாடல்களைப்பாடி கூடி கும்மியடித்து வீடுகள்தோறும் போய்யாசிப்பார்கள் கூடுமானல் இப்படியே எழுகிராமங்களில்போய் யாசிக்கலாமென நியதி யிருக்கின்றது.

இவ்வாறு யாசித்த பொருள்களை கொணர்ந்து தூர்வாரின ஆள்களுக்கும் மற்றும் பலவித திருப்பணியாற்றிய பல மக்களுக்கும் எழைகளுக்கும் கொப்பரைகளில் கஞ்சி காய்ச்சி வார்ப்பார்கள். ஊரிலுள்ள தனிகர்கள் கம்பத்தங்களிலிருந்தும் பானைபானையாக கஞ்சி கொண்டுவந்து வார்ப்பார்கள். அவ்வமயம் ஓர் மட்காகத்தில் ஊற்று ஜலத்தை மூகர்ந்து வேப்பிலை சொருகி வைப்பார்கள். மாவு பழம் முதலியனவும் தயாரிப்பார்கள் பின்னர் படைத்து ஒவ்வொருவருக்கும் தீர்த்தபானம் கொடுப்பார்கள் கஞ்சியும் மாவு பிரசாதங்களையும் வாரிகொடுப்பார்கள் சில நிமிஷங்கள் ஆனந்தமாக உண்டுகளிப்பார்கள். இது தான் ஆதிகால கங்கை விழாவின் உண்மை நோக்கம்.

தற்காலம் இம்முறைகள் போய்விட்டன ஊழைஜனங்கள் ஊழைகுப்பிடு ஊழைதிருவிழாக்கள் கேளித்தனமாக வீண்செலவிட்டு செய்கிறார்கள் இக்காலத்தில் வருஷவாரி தூர் வாரியும், கட்டடம் கட்டியும், பழுது செப்பனிட்டாவது அல்லது புதிய தடாகமுண்டுபண்ணியாவது விழா கொண்டாடுவதில்லை நாற்றமெடுத்த குளத்தின் ஜலத்தை கரகத்திலடைத்து விழா கொண்டாடுகின்றனர் பழைய ஜலத்துக்கு விழா எற்றுக்கு? வீண்செலவு எற்றுக்கு? திருப்பணியாற்றாது திருத்தேரெற்றுக்கு? கெங்கை ரூபத்தை மங்கை ரூபமாக்கி அதற்கு பந்நூறு செலவிட்டு சிலையை அலங்கரித்து மகிழ்வது எற்றுக்கு? இது சநாதன தர்மத்திற்கு முற்றிலும் முரண்பாடல்லவா மிகப்பழைய தமிழர் உறைவிடங்களுக்குச் சென்று பார்த்தால் இன்றைக்கும் இவ்வித சின்னங்கள் பொலிந்து காணப்படுகின்றன. கங்கையை கரகவடிவமல்லாது, சிலைவடிவமாக கும்பிடவேண்டுமென்பது நமது ஓவியங்களிலும் காவியங்களிலும் கிடையாதே. நரைத்த கிழவர்கள் பெரும்பாலோர் இதனை ஆட்சேபித்து எங்கள் காலத்தில் இவ்வித முறைகிடையாதென நேருக்குநேராக கூறுகின்றார்களே, பழையகாலத்து அறிவாளிகள் இத்தகைய படாடோபமானதும் நலமற்றதுமான விழா ஆர்ப்பரிப்பை கண்டு துக்கிக்க அஞ்சுகின்றனரல்லர். இஃது ஓர் புறமிருக்க புண்ணிய நதிகளும் தீர்த்தங்களும் எவ்வாறு அனுஷ்டானத்திலிருக்கின்றதென படமிட்டு பார்ப்போம். உதாரணமாக கெங்கை நதியை எடுத்துக் கொள்வோம்

கங்கையாற்றின் பெருமையைப்பற்றி முற்கூறியுள்ளோமல்லவா? அப்படிப்பட்ட புனிதமான கங்காதீர்த்தம் இன்றைக்குஎப்படியிருக்கின்றது. பரிசுத்த ஜலம் ஊரினது பஞ்சமகாபாதகங்களையன்றோ அடித்துக்கொண்டு செல்கின்றது.

பிணங்களை கங்கையாற்றில் தகனம் செய்தால் மோக்ஷகதி அப்பிணங்களுக்கு கிடைக்குமென்று எண்ணி பலயோசனை காத வழிகளினின்றும் செத்தபிணங்களையும் சாகப்போகும் பிணங்களையும் வாரிக்கொண்டு வந்து இந்நதிக்கரையில் தகனம் செய்கி

றூர்கள். பாதிவேகாத பிணங்களைவாரி ஜலத்தில் எறிந்துவிடுகி றூர்கள். சிலர் ஆற்றிலேயே தகனிக்கமுடியாது எறிந்துவிடுவது முண்டு. இப்படி தினந்தோறும் ஆயிரக்கணக்கான பிணக்குவி யல்கள் பிரேதசாம்பல்கள் எலும்புகள் ஜலத்தில் எறியப்படுகின் றன. போதாத் குறைக்கு இறந்தவா கங்கையில் தகனம் செய்ய இயலாதவர்களின் எலும்புகளை வாரி ஓர் பாத்திரத்திலடைத்து காசி யாத்திரைபோகும் சமயத்தில் சுமந்துகொண்டு சென்று ஆற்றில் கொட்டுகிறூர்கள். இறந்த பாவ ஆத்மாக்களின் யாக் கையில் எஜ்ஜியஎன்புகளாவது கங்சாதீர்த்தத்தில் பட்டவுடனே உயிர்துறந்த ஆத்மாக்களுக்கு நல்லகதி கிடைக்கப்பெருகின்றன வென்றும் முழுமூடநம்பிக்கை இதற்குக் காரணங்களாகும்.

இம்மட்டுமா! இந் நதியில் ஸ்நானம செய்தால் சகலபாப மும் தீருமென்றுக்கருதி உலகத்திலுள்ள பல்வேறிடங்களிலிருந் து இந்நதியில் வந்து ஸ்நானம்செய்கிறூர்கள் இவாகளில் பெரும் பாலோர் பணக்காரர்களாகவே யிருக்கவேண்டும். ஆடவரும் பெண்களும் ஓர்பகலில் கோடிக்கணக்காகத்தான் கணக்கிடப் படும் இந்நதியில் கரையான்களைப்போன்ற வெட்டியான் முத லிய நீர்முழ்கி பயல்கள் ஆயிரக்கணக்காக இந்நதியில் மூழ்கிக் கொண்டேயிருப்பார்கள். ஆபரணங்கள்நிறைய பூட்டியிருக் கும் இளங்குமரிகள் ஸ்நானம் செய்ய மூழ்குவதை உற்று நோக்கிக்கொண்டே ஜலத்திற்குள்ளாவே வந்து அவாகள் கால் களைப் பிடித்து முதலைகள் போன்று இழுத்துப்போய் விடுவார் கள். நெருக்கமான கும்பலாகையால் இவ்விஷயம பலநிமிஷ ங்களுக்குப்பிறகுதான் மூழ்கினமங்கையைக் காணேமென்று ஆரம்பிப்பார்கள். அப்பொழுது கரையில் உட்கார்ந்திருக்கும் பலகோடிசாமியார்கள் மங்கையை இழந்த உற்றூர் புலம்பலு க்கு "கங்காதேவி உன்மகள்மேல் ஆசைப்பட்டு உள்ளே யிழுத் துக்கொண்டாள், புண்ணியம்பெற்றூள்; இதுயாருக்குக்கிடைக் கும் இப்பேரு; கங்கையினிடம் உங்கள் அழுகை முகத்தைக் காட்டாது சிரித்த முகத்தோடு போங்கள் புண்ணியம் புண்ணி யம்" என்று உபதேசம் செய்வார்கள். இவர்கள் இழுக்கப்ப

ட்ட மங்கையின்மேல் அலங்கரித்திருந்த நகைகளை பறிக்கும் பங்காளிகளாகும். இவ்வாறு நகைகளாலலங்கரிக்கப்பட்ட இளங்குமரிகள் பலர் தினந்தோறும் இப்பெரும் மனித முதலைக்கு ஆளாகின்றனர். ஆற்றங்கரையில் ஆணும் பெண்ணும் பெருங் கூட்டமாகவேயிருப்பதால் மலஜலங்களை ஆற்றிலேயே கழித்து விடுகிறார்கள். இது போகட்டும்,

மற்றொரு கூற்றையும் நினைத்து நினைத்து பெருமூச்செரியாதிருக்க முடியவில்லை. இறப்பதற்கு பலநாளிருக்கையிலேயே இங்குவந்து புண்ணியம் வந்து சேருமென்று பலர் உயிரை வியர்த்தமாக நதியில் மூழ்கி விடுகிறார்கள். சிலர் பணத்துக்கு ஆசைப்பட்டு கொன்றே போட்டுவிடுகிறார்கள். இவைகளுக்கு மேலான பல சன்னியாசி கூட்டங்களெல்லாம் நேரில் பிச்சையெடுத்தும் திருடியும் சம்பாதிக்கும் கூட்டம் நிரவியுள்ளது ஆ! தோ புண்ணிய தீர்த்தமே கங்காபுனலே உன்னில் முழுகியடையும் புண்ணியம் பூராவும் உன்படுக்கையில் நடக்கும் கோடிக்கணக்கான பாபங்களுக்கு வட்டிகூடகட்டாதே! இம்மாதிரி காவேரி, கிருஷ்ணா கோதாவரி முதலிய எல்லா தீர்த்தங்களிலும் பிரேதங்கள் தகனிக்கப் படுகின்றன. கங்கையாறு மிகுந்த ஆழமும் படகு மூலயமாய் கடக்கவேண்டியிருப்பதால் மனிதசோரம் நடக்கின்றன. மற்றநதிகளில் இதுதவிற மற்ற ஆபாசங்களுக்கு குறைவிராது.

தற்காலத்து நவீன நாகரீகத்தில் மூழ்கிய மற்றோர் சார்பினர் கூற்றையும் யாம் இங்கு விவரிக்காமலிருப்பதற்கில்லை. இவர்கள் ஞானசிகாமணிகளின் தோண்டுகாலை கவனித்தார்களில்லை. சதா அன்னிய ஆடைகளிலும் பாடைகளிலும் நாகரீகத்திலும் சாதிபக்கலைகளிலும் கவனம் வைத்து உண்மை நெறி ஓராது மேனாட்டு முறைகளைமட்டும் நன்கறிந்த கூட்டமாகும் இதனால் புராதனமாக இந்நாட்டிலனுசரித்த உண்மை புலனை சிந்தியாது போதகாசிரியர் மாணாக்கர்கள் உள்ளிட்ட சுகாதாரவர்க்கம் நவீன சுகாதார கொண்டாட்டத்தைக்கண்டு

பங்காளிகளாகும். ஐயோ! ஐயோ! இவ்வாறு தினந்தோறும் பிடித்து மக்களை நீக்கி மாணவர்களுக்கு மட்டும் வாய்வேதாந்தம் பேசி பூசல்விழா கொண்டாடுகிறார்கள் இவர்கள் சுகாதார முறைகளைக்காட்டி அதன்படி ஒழுகி காட்டவேண்டியிருக்க இனிமையாக பேசுவதிலும் தின்பண்டங்களிலுமேதான் இவர்கள்சுகாதாரத்தைக்காட்டுகின்றார்கள் இதற்காக பலரூபாய்களும் செலவிடுகின்றார்கள்.

என்ன! இந்நாட்டவரின்வேற்றுமைவிரிவிழைகாலம்: அறிவுள்ளமக்கள் ஓர்பக்கமும் அறிவற்ற மக்கள் மற்றோர் பக்கமும் காரியங்களை சிறப்பிக்க பல துறைகளிலும் துணிந்துபடின், மாற்றார் இந்நாட்டை பரிகசிக்காது வேறு என்செய்வார். கற்றோர் கல்லாதாரின் அறிவு வளர்ச்சியிலும் க்ஷேமலாபங்களிலும் ஈடுபட்டுழைப்பது எங்ஙனம் பகவான் நல்லார் பொல்லார், கல்லார், கற்றார், செல்வர், தரித்திரர், முதலிய ஏற்றத்தாழ்வுகள் ஒன்றோடொன்று தம்மிற்கலந்து தங்களுக்குள்ள பரிவர்த்தனைகளைச் சரிப்படுத்திக்கொள்ளும்படிக்கே மாறுபாடாக படைத்துள்ளான். எனவே மக்கள் கல்லாதார் நடத்தும் கங்கைவிழாவில் ஒதவாரும் ஒத்துழைத்தாலன்றோ அதிற் காணும் சிறு சிறு தவறுகளையும் களைந்து புனிதப்படுத்தினால் என்னென்றுபரிமளிக்கும்.

கடைசியாக சில முக்கிய குறிப்புகளைச் சொல்லி முடித்துவிடுவோம் அன்பர்கள்உசிதமென்றுள்ளிர் கொள்ளிர் கொள்ளுக அநுசிதமென் றெள்ளிற் தள்ளிற தள்ளுக. எப்படியாயினும் சரி இறுதியாக கோடைகால விழாவைப் பற்றி கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவாயிருக்கின்றன எம்மதத்தினரும் முரணாகாவண்ணம் பழையகாலஉண்மை தொண்டுகளை பீடிகையாகக்கொண்டு தொண்டாற்றவேண்டும். இம்முறைகள் பணத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லை நேர்த்தியாகவும், சிங்காரமாகவும் சுகாதார முறைகளை இனிது முடித்துவிடலாம். இப்படி பொதுநன்மைகளை சுலபமாக முடிப்பதற்காகவே தெய்

வத்தோடு பிணைத்திருக்கிறுர்கள். தெய்வத்தன்மைப்பெற்றதென் ருல்தான் அனைவரும் பயந்துக்கொண்டு செய்வார்கள். மகம் மதியர் கிறிஸ்தவர்களும் கூட இதில் கலந்துக்கொள்ளலாம்.

மகம்மதியர் கிறிஸ்தவர்கள் இதில்கலந்துக் கொள்ளவேண் டியதற்கு முக்கியமான விஷயம் சுகாதாரத்தை பொருந்தியிருக்கி றது. ஜலம் அனைவர்க்கும் இன்றியமையாததால் அதனை சுத்தி செய்வதற்கும் பழுது பார்ப்பதற்கும் எம்மதத்தினரும் கடமைப் பட்டவராவார் இதனல் ஏதேனும் பொருளுதவி செய்யவேண்டி நேரிட்டால்அதற்கு சகலரும் கொடுத்தல் உத்தமம்.

இவ்வித சமரஸமான உத்தமகொள்கைக்கு மாருகாவண் ணம் விஷயங்களை பொதுமக்களுக்கு தெரிவித்து நடத்தும் சக்தி மான்கள் தற்காலம் ஒவ்வொரு கிராமங்களிலும் இருப்பது அவசியமாயிருக்கிறது. டவுன்களில் இவ்விதவேலைகளை உயர்ந்த அறிவாளிகள் அல்லது வக்கீல்கள்தான் ஏற்று பணியாற்றல் சால சிறந்ததாகும்.

அவை முதலாவது ஜலாதாரங்களை சுத்திசெய்தல் 2-வது கற்றவரும் ஆசிரியரும் மாணுக்கர்களும் கூட சேர்ந்து கெங் கைதிருப்பணி செய்து மாலை போழ்தில் பொது மக்களுக்கு அவற்றை விளக்கிக் கூறுமுகத்து உபந்நியாசங்கள் நிகழ்த்த வாம் அறிவாளிகளின் அலுவல்தானே தொண்டுசெய்தல் பிறகு அத்தொண்டின் விபரங்களை விளக்கிக்காட்டுதல்தான் தற்காலம் அனைவரும் ஒப்பமுடிந்தவழி 3-வது பொதுக் குளங்களுக்கும் வீட்டுக்கிணறுகளுக்கும் கைப்பிடி சுவர் கட்டுதல் பழுதுபார்த் தல் முதலியவை. 4-வது கிணறு குளங்களுக்கு சமீபத்தில் இரும்பு பக்கெட்டுகள் அல்லது மண்தோண்டிகள் சேகரித்து வைத்தல். 5-வது ஜலவருவாயுள்ள பிரதேசங்களில் ஆபாசங் களை சுத்திசெய்வதும் ஜலவருவாய்க்கேற்ற கால்வாய் முதலியவை கள் வெட்டுவதும் 6-வது அவசியமான இடங்களில் புதிய கிணறு குளங்கள் வெட்டுவித்தல். சமீபததில் ஆடு மாடுகள்

குடிப்பதற்கு தொட்டிகள் கட்டலும். 7-வது ஏரி முதலிய நீர்நிலைகளில் உள்வாயில் வருஷவாரி 100-கன அடி மண் கிராமத்திலுள்ள ஒவ்வொருத்தலாவும் கோடைகாலங்களில் எடுத்து வெளியேபோடும்படி செய்தல் மண்எடுக்க இயலாதவர்கள் தங்கள் கூலியாட்களை உபயோகப்படுத்தலாம். 7-வது ஏரி புறம்போக்கு குளம் புறம்போக்குகளிலும் புஷ்பச்செடிகளையும் கனிதரும் செடிகளையும் வைத்து பராமரித்தல் அந்த ஆள்களைக்கொண்டு குளங்காவல்கள் புரியவேண்டும். அவர்களுக்கு மாசூலிலிருந்து வருமானத்தை பெறவேண்டுமேயொழிய பொது ஜனங்களாவது யூனியன்போர்டு தாலுக்கா போர்டிலிருந்து யாதொருதொகையும் காப்பு விஷயத்தில் ஈடுபடக்கூடாது. ஆனால் மேல்பார்வை செய்யலாம். வயது வந்தவர்களையே இந்த வேலைக்கு அமர்த்தவேண்டும். வேண்டிய சாமான்களை பெரியதனக்காரர்கள் அல்லது பஞ்சாயத்தார் கொடுத்துதவி பிறகு அதன் மாசூலிலிருந்து அந்த கிரயத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மொத்த வருமானத்தில் 8-ல் 1-பாகம் பொதுநன்மைக்காக வசூலிக்கவேண்டும். சில இடங்களில் குளம்புறம்போக்கில் வாழை, எலுமிச்சை, மா, பலா, முதலியவ்ருக்ஷ வகைகளும், புஷ்பச் செடிகளும் வைத்து ஆள் கூலி போக மாதம் 10-ரூபாய் அதிக வருமானம் வந்திருக்கிறது. இவ்வித முயற்சியால் வேலையில்லாமலும் திக்கில்லாமலுமிருக்கும் பல வயது சென்றவர்களுக்கு உபகாரமாயும், காக்ஷியாயும், பொது வருமான முள்ளதாயுமிருக்கும். நலம்பெறுவோர் நன்கு முயன்று ஒன்றி நலமுறுவராக.

நல்லோர் நினைத்த நலம் பெறுக
நன்று நினைத்தெல்லோரும் வாழ்க

உருவு கண்டெள்ளாமை வேண்டும் உருள் பெருந்
தேர்க்கச்சாணி யன்னாருடைத்து குறள்

முற்றிற்று

முக்கியகவனிப்பு.

சிலவாண்டுகளுக்குமுன் சமரஸப்பத்திரிக்கை நடத்திநஷ்டமேற்பட்டிருப்பதால் தற்காலம் புத்தகரூபமாய் பல புத்தகங்கள் தங்களுக்கு அனுப்பப்படும். ஏஜண்டுகளிடம் தர்மவசூலை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். கீழ்கண்ட புத்தகங்கள் அச்சியிலிருக்கின்றன. பொருளுதவி செய்து ஆதரிப்பீர்களானால் சிக்கிரம் வெளிபோக்குலவும்

	ரூ	அ	பை
கங்கைவிழா	0	4	0
கங்கையம்மன் கும்மி	0	0	6
மாரிவிழா	0	4	0
மாரியம்மன் கும்மி	0	0	6
வைசிய தர்மம்	0	8	0
பிழைக்கும் வழி அல்லது பாரஸ்டு இலாக்காவின் புதியநிர்மாணம்	0	4	0
குடியாக்ஷிமுறையும் யதேச்சாதிகாரமும்	0	4	0
பிராம்மண தர்மம்	0	4	0
க்ஷத்திரிய தர்மம்	0	8	0

ஏஜண்டுகள் மூல்யமாவது நேரில் பணம் அனுப்பியாவதுடனே பெற்றுக்கொள்ளவும்.